**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Calender : | | Miscellaneous | : | |
| Preliminary Register : | | Case No. | : | **S.C.20/2022** |
| Sessions : | | | | |
| Deposition of witness for : | | Prosecution | : | **P.W. 3** |
| | | Defence | : | **D.W.** |
| | | Court | : | **C.W.** |

| **Name :** | ரெங்கராஜ் | **S/o.(or)W/o. :** | |
|---|---|---|---|
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **18.11.2025**

**1 வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு.**

**முதல் விசாரணை:**

நான் விளாமுத்தூரில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். ஆஜர் 1வது எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோன பச்சையம்மாளை தெரியும். சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் காலை 10.00 மணியளவில் ஊர்தலைவர் போன்செய்து பச்சையம்மாள் இறந்துவிட்டதாக சொன்னார்கள். அவர் சொன்னதின் பேரில் கையெழுத்து போட்டேன். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது. போலிசார் விசாரிக்கவில்லை.

**இந்நிலையில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

எனக்கு சொந்தமாக வயல் உள்ளது. விளாமுத்தூர் – பெரம்பலூர் ரோட்டில் ARC நகர் உள்ளது. அங்குள்ள வீட்டில் இறந்துபோன பச்சையம்மாள் மற்றும் 1வது எதிரி குடும்பத்தார் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். 19.09.2021ம் தேதி நள்ளிரவு 01.45 மணியளவில் 1வது எதிரியும், மற்றொரு நபரும் அவர் வீட்டில்

கேட்டில் ஏறி குதித்தை நான் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால்சரியல்ல. 1வது எதிரி அவர் வீட்டு காம்போண்டில் தான் ஏறி குதிக்கிறார் என்று நான் ஒன்றும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. 20.09.2021ம் தேதி காலை 07.30 மணியளவில் பச்சையம்மாள் இறந்துவிட்டதாக நான் கேள்விபட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே 1வது எதிரி, அவர் அம்மாவும் பச்சையம்மாளை வீட்டிலிருந்து காலிசெய்யவேண்டுமென்று மிரட்டி கொண்டிருந்தார்கள் என்றுபோலிசார் விசாரணையில் சொன்னேன் என்றால்சரியல்ல. ஏற்கனவே சொன்னபடி 1வது எதிரி பச்சையம்மாளை கொலைசெய்துவிட்டதாக போலிசார் விசாரணையில் நான் சொன்னேன் என்றால்சரியல்ல. போஸ்ட்மாட்டத்தின் போது நான் மருத்துவமனை செல்லவில்லை. மருத்துவமனையில் இருந்து பிரேதவிசாரணையின் போது நான் உடன்இருந்தேன் என்றால் சரியல்ல. 1வது எதிரி எனக்கு ஒன்றுவிட்ட சொந்தமாகும். 1வது எதிரி என்சொந்தகாரர் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

இல்லை.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.